©
GOVERNMENT OF TAMIL NADU
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 12.00 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 406A] சென்னை, வியாழக்கிழமை செப்டம்பர் 9, 2021
ஆவணி 24, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு-2052

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

பொருளடக்கம்

| **சட்டமுன்வடிவுகள்:** | *பக்கங்கள்.* |
|---|---|
| எண் 37/2021—தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டம் .. .. | 2-4 |
| எண் 38/2021— தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டம் .. .. | 5-12 |
| எண் 39/2021—தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (இரண்டாம் திருத்தச்) சட்டம்) .. .. .. | 13-16 |
| எண் 40/2021—தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டம் .. .. .. .. | 17-29 |

**2021 – ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 9–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/2021**

**1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

**குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.**

1. (1) இந்தச் சட்டம், 2021-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**3-ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடுவதான), 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 3 -ஆம் பிரிவில்,- **தமிழ்நாடு சட்டம் V/1920.**

(i) பின்வரும் கூறானது (5)-ஆம் கூறுக்காக மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :-

"(5)"ஊர்தி" என்பது சுருள்கள் அல்லது சுருள்களாக செயல்படும் பிற துணைக்கருவிகளுடன் கூடிய சக்கர வாகனம் எதுவும் என்று பொருள்படும் மற்றும் மிதிவண்டி, மூன்று சக்கர வாகனம், ஆள் இழுவை வண்டி, பல்லக்கு மற்றும் படகின் வகை எதையும் உள்ளடக்கும், ஆனால் 1988-ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மையச் சட்டம் 59/1988) பொருளின்படி இயக்கூர்திகள் எதையும் உள்ளடக்காது.";

(ii) (8)-ஆம் கூறில், 1913-ஆம் ஆண்டு "இந்திய நிறுமங்கள் சட்டம்" (மையச் சட்டம் VII/1913) எனும் சொற்றொடருக்கு பதிலாக "2013-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டம் (மையச் சட்டம் 18/2013)" எனும் சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**124-J-ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

3. முதன்மைச் சட்டத்தின் 124-J-ஆம் பிரிவில் (c)-ஆம் கூறிற்கு கீழுள்ள விளக்கத்திற்காக, பின்வரும் விளக்கமானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"**விளக்கம்**.- இந்தக் கூறின் நோக்கத்திற்காக "மாற்றுத் திறனாளி" எனும் சொல்லானது "2016-ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் சட்டத்தின் (மையச் சட்டம் 49/2016)" 2-ஆம் பிரிவின் (s) கூறின் படி அதற்கு குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.".

**250-ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

4. முதன்மைச் சட்டத்தின் 250-ஆம் பிரிவில்,-

(i) (4)-ஆம் உட்பிரிவில், (a) கூறில், "1911-ஆம் ஆண்டு இந்திய தொழிற்சாலைகள் சட்டம் (மையச் சட்டம் XII/1911)", எனும் சொற்றொடருக்கு பதிலாக "1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் (மையச் சட்டம் LXIII/1948)" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (6)-ஆம் உட்பிரிவில், இந்த விளக்கத்தின் கீழ், "1934-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் (மையச் சட்டம் XXV/1934)" எனும் சொற்றொடருக்கு பதிலாக "1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் (மையச் சட்டம் LXIII/1948)" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**306-ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

5. முதன்மைச் சட்டத்தின் 306-ஆம் பிரிவில், (28)-ஆம் கூறுக்கு பின்னர், பின்வரும் கூறானது உட் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :-

"(28-A) படகுகளை பதிவு செய்வதற்காகவும் நீர் நிலைகளில் படகோட்ட செயற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்தவும்.".

**குறித்த சில இயற்றுச் சட்டங்களுக்கான மாற்றீடு**

6. முதன்மைச் சட்டம் முழுவதுமாக, "1914-ஆம் ஆண்டு இந்திய இயக்கவூர்திகள் சட்டம்", "1910-ஆம் ஆண்டு இந்திய மின்சாரச் சட்டம் (மையச் சட்டம் IX/1910)," "1894-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டம் (மையச் சட்டம் I/1894)", "1924-ஆம் ஆண்டு இராணுவ குடியிருப்புச் சட்டம் (மையச் சட்டம் II/1924)", "1933-ஆம் ஆண்டு தமிழ்நாடு பணப்பயிர்கள் சந்தைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் XX/1933)", "1908-ஆம் ஆண்டு இந்திய காலவரம்புச் சட்டம் (மையச் சட்டம் IX/1908)" மற்றும் "1898-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை தொகுப்புச் சட்டம் (மையச் சட்டம் V/1898)", எனும் சொற்றொடர்களுக்காக, அவை வருகிற இடங்களிலெல்லாம், முறையே "1988-ஆம் ஆண்டு இயக்கவூர்திகள் சட்டம் (மையச் சட்டம் 59/1988)", "2003-ஆம் ஆண்டு மின்சாரச் சட்டம் (மையச் சட்டம் 36/2003)", "2013-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான உரிமை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியேற்றச் சட்டம் (மையச் சட்டம் 30/2013)", "2006-ஆம் ஆண்டு இராணுவ குடியிருப்புச் சட்டம் (மையச் சட்டம் 41/2006)", "1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளை சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1989)", "1963-ஆம் ஆண்டு கால உச்சவரம்பு சட்டம் (மையச் சட்டம் 36/1963)", மற்றும் "1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை தொகுப்புச் சட்டம் (மையச் சட்டம் 2/1974)", எனும் சொற்றொடர்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்

**நோக்கக் காரண விளக்கவுரை.**

படகுகளின் பதிவுக்காக மற்றும் ஏரியில் பயணம் செய்வதற்காக படகுகளுக்கான தகுதிச் சான்றிதழின் வழங்குகைக்கு வகைசெய்வதன் மூலம் பயணிகள் மற்றும் படகோட்டிகளின் பாதுகாப்பு மற்றும் இடர்காப்பை உறுதி செய்யும் நோக்கத்திற்காக, கொடைக்கானல் நகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கொடைக்கானல் ஏரியில் படகோட்ட செயற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்தவும் பார்வையிட வரும் சுற்றுலா பயணிகள் ஏரியைச் சுற்றியுள்ள இயற்கை எழிலை ரசிக்கவும் மற்றும் அதன்படி நகராட்சியின் வருவாய் மேலும் அதிகரிக்கச் செய்யலாம் என்பதனாலும் மிகவும் மதிப்புமிக்க மற்றும் பிரபலமான சுற்றுலாத்தலம் ஒன்றில் சுற்றுச்சூழல் நிலையை பாதுகாக்கவும் அரசானது திட்டமிட்டுள்ளது.

2. நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் படகோட்ட செயற்பாடுகளை ஒழுங்குமுறைப் படுத்துவதற்காக மற்றும் கூறப்பட்ட நோக்கத்திற்காக நகராட்சி மன்றத்தினால் துணைவிதிகளை செய்வதற்காக 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் V/1920), இயலச்செய்யும் வகைமுறைகள் ஏதுமில்லை. எனவே அரசானது அதன் நோக்கத்தை எய்துவதற்காக கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் V/1920-ஐத் திருத்தம் செய்ய முடிவு செய்துள்ளது. மேலும் கூறப்பட்ட சட்டத்தில் காணப்படும் சில இயற்றுச் சட்டங்கள் முன்னரே நீக்கறவு செய்யப்பட்டுள்ளது மற்றும் மீண்டும் சட்டமாக இயற்றப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பினை பயன்படுத்தி அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட இயற்றுச் சட்டங்களை மாற்றியமைப்பதற்காக மேலும் திட்டமிடப்பட்டுள்ளது.

3. இந்த சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.என். நேரு,**
*நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்.*

சென்னை,
2021 செப்டம்பர் 9.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

**2021 – ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 9–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/2021**

**குறித்த சில இயற்றுச் சட்டங்களை நீக்கறவு செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இயற்றுச் சட்டங்கள் வழக்கத்திலிருந்தவை அல்லது மற்றபடி வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கிற அல்லது குறித்த வகையில் மற்றபடி வெளிப்படையாக நீக்கறவு செய்யப்பட்டதன் மூலம் தவிர பிறவாறு நடைமுறையில் இருக்கக்கூடியது அற்றுப்போகக் கூடியவையாக இருப்பவை கட்டாயமாக நீக்கறவு செய்யப்படுதல் வேண்டும் என்பது உகந்ததாய் இருப்பதாலும்:

இந்தியக் குடியரசின் எழுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு.

1. இந்தச் சட்டம், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

குறித்த சில இயற்றுச் சட்டங்களின் நீக்கறவு.

2. இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இயற்றுச் சட்டங்கள் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்பட்டுள்ளது.

காப்புரைகள்.

3. இந்தச் சட்டத்தால் நீக்கறவு செய்யப்படும் இயற்றுச் சட்டம் எதுவும் பிற இயற்றுச் சட்டம் எதனையும் பாதிக்காது. அதில் நீக்கறவு செய்யப்பட்ட இயற்றுச் சட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கிற போதும் சேர்க்கப்பட்டிருக்கிற போதும் அல்லது சுட்டப்படும் போதும்:

மற்றும் இந்தச் சட்டம் செல்லுந்தன்மையையோ, செல்லாத் தன்மையையோ அல்லது செல்திறத்தையோ அல்லது ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட எதனையும் அல்லது பாதிக்கப்பட்டதை அல்லது உரிமையையோ, உரிமை மூலத்தையோ, கடப்பாட்டையோ அல்லது ஏற்கனவே பெறப்பட்ட கடப்பாட்டினை அதிகப்படியானதையோ அல்லது ஏற்படுத்தப்பட்டிருப்பதையோ அல்லது தீர்வு எதனையும் அல்லது தொடர்பான நடைமுறையை அல்லது பற்று எதனலிருந்தும் அல்லது பற்றினை விடுவிப்பதை, தண்டம், உதவியையோ, கடப்பாட்டினையோ, கோருதலையோ அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட உறுதிமொழியையோ அல்லது நிரூபிக்கப்படும் கடந்தகால செயல் அல்லது விசயம் எதனையும் பாதிக்காது:

கொள்கை எதனையும் அல்லது சட்டத்தின் ஆட்சியை அல்லது ஏற்படுத்தப்பட்ட அதிகாரவரம்பை அல்லது அமைவுமுறையையோ அல்லது வாதுரையின் போதோ, வழக்கத்தையோ அல்லது நடைமுறையையோ அல்லது இருந்து வரும் பழக்கவழக்கத்தையோ, வழக்காற்றையோ, சலுகையையோ, தடையையோ, விலக்கையோ, அலுவலகத்தையோ அல்லது பணியமர்த்தத்தையோ எவ்வாறிருப்பினும் அவை முறையே எந்த முறையிலும் ஈங்கிதனால் இயற்றுச் சட்டத்தில் அல்லது இயற்றுச் சட்டம் எதிலிருந்தும் எந்த முறையிலும் உறுதி செய்யப்பட்டிருக்கலாம் அல்லது ஏற்பளிக்கப்பட்டிருக்கலாம் அல்லது அதன்மூலம் பெறப்பட்டிருக்கலாம் என்றிருக்கிற எதுவும் பாதிக்காத வகையில் இருக்கும்;

இயற்றுச் சட்டம் எதுவும் புத்துயிரளித்தல் அல்லது அதிகாரவரம்பு எதனையும் மீட்டெடுத்தல், அலுவலகம், பழக்கவழக்கம், பொறுப்பு, உரிமை, உரிமை மூலம், சலுகை, தடை, விலக்கு, பயன்படுத்துதல், செய்தொழில், நடைமுறை அல்லது பிற பொருட்பாடு அல்லது தற்பொழுது இல்லாமல் இருக்கும் பொருள் அல்லது செல்லாற்றலிலுள்ளவை இந்தச் சட்டத்தால் நீக்கறவு செய்யப்படுவதால் பாதிப்பிற்குள்ளாகாது.

## இணைப்புப் பட்டியல்.

## நீக்கறவுகள்.

(2 ஆம் பிரிவைக் காண்க)

| வரிசை எண் | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | *குடியரசுத் தலைவரின் சட்டம்* |
| 1. | 1976 | 32 | 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவிக்காலத்தை நீட்டித்தல்) சட்டம். |
| 2. | 1976 | 33 | 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்காலத்தை நீட்டித்தல்) சட்டம். |
| 3. | 1977 | 5 | 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்டம். |
| | | | *தமிழ்நாடு சட்டங்கள்* |
| 4. | 1876 | I | 1876 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில வருவாய் மதிப்பீட்டுச் சட்டம். |
| 5. | 1886 | IV | 1886 ஆம் ஆண்டு இருப்புப்பாதை பாதுகாப்புச் சட்டம். |
| 6. | 1888 | I | 1888 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார அமைப்புகள் கடனளிப்புச் சட்டம். |
| 7. | 1904 | II | 1904 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிரிக்கமுடியா உடைமைகள் சட்டம். |
| 8. | 1914 | VIII | 1914 ஆம் ஆண்டு தமிழ்நாடு பன்முகப்படுத்தல் சட்டம். |
| 9. | 1930 | IX | 1930 ஆம் ஆண்டு செவ்வல்பட்டி பிரிக்கமுடியா உடைமைச் சட்டம். |
| 10. | 1931 | VI | 1931 ஆம் ஆண்டு கிழக்கு மற்றும் மேற்கு தஞ்சாவூர் அமர்வு நீதிமன்றப் பிரிவுகள் (செல்லத்தக்கதாக்குதல்) சட்டம். |
| 11. | 1933 | IX | 1933 ஆம் ஆண்டு வெள்ளியகுண்டம் பிரிக்கமுடியா உடைமைச் சட்டம். |
| 12. | 1935 | VII | 1934 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடனீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம். |
| 13. | 1936 | XI | 1936 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் இணக்கப்படுத்தல் சட்டம். |
| 14. | 1937 | III | 1936 ஆம் ஆண்டு தமிழ்நாடு குற்றவாளிகள் கண்காணிப்புச் சட்டம். |
| 15. | 1938 | XIV | 1938 ஆம் ஆண்டு சிறைச்சாலைகள் மற்றும் இந்திய மனநிலை குறைபாடு (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். |
| 16. | 1947 | XXIX | 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு குற்றவாளிகள் கண்காணிப்பு (திருத்தச்) சட்டம். |
| 17. | 1947 | XXXIV | 1947 ஆம் ஆண்டு அபின் மற்றம் தீங்குவிளைவிக்கும் போதைப்பொருள்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். |
| 18. | 1948 | V | 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு காலாவதிச் சட்டங்கள் (ஐயப்பாடுகளை நீக்குதல்) சட்டம். |

| வரிசை எண் | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 19. | 1948 | VII | 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு மறு இயற்று மற்றும் நீக்கறவுச் (எண் I) சட்டம். |
| 20. | 1948 | VIII | 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு மறு இயற்றுச் (எண் II) சட்டம். |
| 21. | 1948 | IX | 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு மறு இயற்றுச் (எண் III) சட்டம். |
| 22. | 1949 | X | 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு மறு இயற்றுச் சட்டம். |
| 23. | 1949 | XXI | 1949 ஆம் ஆண்டு கைதிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். |
| 24. | 1949 | XXIV | 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு குத்தகைதாரர்கள் மற்றும் வரி செலுத்தும் உழவர்கள் பாதுகாப்புச் சட்டம். |
| 25. | 1949 | XXXV | 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒன்றிணைக்கப்பட்ட மாநிலங்கள் (சட்டங்கள்) சட்டம். |
| 26. | 1950 | III | 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு மறு இயற்றுச் சட்டம். |
| 27. | 1951 | XXXII | 1951 ஆம் ஆண்டு அபின் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். |
| 28. | 1953 | VII | 1953 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டவர் நலன் (பிரிவினை) தமிழ்நாடு துணைச் சட்டம். |
| 29. | 1953 | XI | 1953 ஆம் ஆண்டு தமிழ்நாடு பழுப்பு நிலக்கரி (நிலம் கையகப்படுத்துதல்) சட்டம். |
| 30. | 1957 | XXI | 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவர்கள் பதிவுச் சட்டம். |
| 31. | 1958 | VIII | 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டம். |
| 32. | 1959 | 6 | 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராமதான கிராமங்கள் (கடன்களை திருப்பிச் செலுத்துதல்) சட்டம். |
| 33. | 1959 | 8 | 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார (திருத்தச்) சட்டம். |
| 34. | 1961 | 3 | 1961 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டவர் நலன் (பிரிவினை) தமிழ்நாடு துணைச் சட்டம். |
| 35. | 1961 | 9 | 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு (இணைக்கப்பட்ட ஆட்சிப்பகுதி) சட்டங்களை நீட்டித்தல் சட்டம். |
| 36. | 1961 | 11 | 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (இணைக்கப்பட்ட ஆட்சிப்பகுதிக்கு நீட்டித்தல்) சட்டம். |
| 37. | 1961 | 20 | 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்தச்) சட்டம். |
| 38. | 1961 | 28 | 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட மேம்பாட்டுக் குழுக்கள் மற்றும் ஊராட்சிகள் (இணைக்கப்பட்ட ஆட்சிப்பகுதிக்கு நீட்டித்தல்) சட்டம். |
| 39. | 1961 | 52 | 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார அமைப்புகள் நிதிச் சட்டம். |
| 40. | 1962 | 16 | 1962 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் விழாக்கால விடுமுறைகள்) திருத்தச் சட்டம். |

| வரிசை எண் | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 41. | 1966 | 23 | 1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்வி நிறுவனங்கள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம். |
| 42. | 1967 | 4 | 1967 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டம். |
| 43. | 1968 | 16 | 1968 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் (சிறப்பு வகைமுறைகள்) சட்டம். |
| 44. | 1968 | 20 | 1968 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியுரிமை சொத்துக்களின் கிராம சேவை மற்றும் தமிழ்நாடு மரபுரிமையான கிராம பதவிகள் (நீக்கறவுச்) சட்டம். |
| 45. | 1970 | 16 | 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி மற்றும் உள்ளாட்சி அதிகார அமைப்புகள் நிதி (திருத்தச்) சட்டம். |
| 46. | 1970 | 33 | 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டம். |
| 47. | 1971 | 36 | 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த மருத்துவ பணியாற்றுபவர்களின் பதிவு (திருத்தச்) சட்டம். |
| 48. | 1972 | 18 | 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு (மாற்றப்பட்ட ஆட்சிப்பகுதி) சட்டங்களை நீட்டித்தல் சட்டம். |
| 49. | 1972 | 21 | 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்களின் குத்தகை நிலுவைத் தொகை (நிவாரணச்) சட்டம். |
| 50. | 1972 | 26 | 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆயத்தீர்வை (திருத்தச்) சட்டம். |
| 51. | 1973 | 29 | 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார அமைப்பு நிதி (திருத்தச்) சட்டம். |
| 52. | 1973 | 37 | 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (செயல்பாட்டினை நிறுத்தி வைத்தல்) திருத்தச் சட்டம். |
| 53. | 1973 | 38 | 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆயத்தீர்வை (திருத்தச்) சட்டம். |
| 54. | 1973 | 42 | 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார அமைப்பு நிதி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 55. | 1974 | 34 | 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (செயல்பாட்டினை மீட்டுயிற்பித்தல் மற்றும் திருத்தச்) சட்டம். |
| 56. | 1974 | 38 | 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி மற்றும் உள்ளாட்சி அதிகார அமைப்பு நிதி (திருத்தச்) சட்டம். |
| 57. | 1975 | 32 | 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி மற்றும் உள்ளாட்சி அதிகார அமைப்பு நிதி (திருத்தச்) சட்டம். |
| 58. | 1975 | 34 | 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) சட்டம். |
| 59. | 1978 | 5 | 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி மற்றும் உள்ளாட்சி அதிகார அமைப்பு நிதி (திருத்தச்) சட்டம். |
| 60. | 1979 | 51 | 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி மற்றும் உள்ளாட்சி அதிகார அமைப்பு நிதி (திருத்தச்) சட்டம். |

| வரிசை எண் | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 61. | 1979 | 60 | 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்டம். |
| 62. | 1980 | 15 | 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்களின் குத்தகை நிலுவைத் தொகை (நிவாரணச்) சட்டம். |
| 63. | 1980 | 16 | 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்களின் குத்தகை நிலுவைத் தொகை (நிவாரண) சட்டம். |
| 64. | 1981 | 3 | 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு பகுதிநேர கிராம அலுவலர்களின் பதவிகளை ஒழித்தல் சட்டம். |
| 65. | 1982 | 27 | 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (உள்ளூர் மேல்வரியை செல்லத்தக்கதாக்குதல்) சட்டம். |
| 66. | 1983 | 26 | 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றத்திலிருந்து பாதுகாத்தல்) சட்டம். |
| 67. | 1984 | 25 | 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி மற்றும் உள்ளாட்சி அதிகார அமைப்பு நிதி (திருத்தச்) சட்டம். |
| 68. | 1984 | 29 | 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (சிறப்பு வகைமுறைகள்) சட்டம். |
| 69. | 1984 | 32 | 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்டம். |
| 70. | 1986 | 53 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்டம். |
| 71. | 1986 | 60 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் (சிறப்பு வகைமுறைகள்) சட்டம். |
| 72. | 1989 | 40 | 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி மற்றும் உள்ளாட்சி அதிகார அமைப்பு நிதி (திருத்தச்) சட்டம். |
| 73. | 1989 | 41 | 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றத்திலிருந்து பாதுகாத்தல்) சட்டம். |
| 74. | 1990 | 38 | 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்களின் குத்தகை நிலுவைத் தொகை (நிவாரணச்) சட்டம். |
| 75. | 1993 | 35 | 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்தச்) சட்டம். |
| 76. | 1997 | 20 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றத்திலிருந்து பாதுகாத்தல்) சட்டம். |

**நோக்கக் காரண விளக்கவுரை.**

தமிழ்நாடு மாநில சட்ட ஆணையமானது குறித்த சில இயற்றுச்சட்டங்கள் மிகவும் பழமையானதாக மற்றும் தேவைக்கு மேற்பட்டு இருப்பதனால் அந்த இயற்றுச்சட்டங்களை நீக்கறவு செய்வதற்கு அதன் பல்வேறு அறிக்கைகளில் பரிந்துரை செய்துள்ளது. மேலும், அனைத்து மாநிலங்களையும், அலுவல் தொடக்க முயற்சியினை எளிதாக்கும் ஒரு பகுதியாக ஒழுங்குமுறை இணக்கச் சுமைக்குறைப்பை மேற்கொள்ளவும் அவற்றின் இயற்று சட்டங்களை மறு ஆய்வு செய்ய மற்றும் தேவைக்கு மேற்பட்டு இருத்தலை குறைக்கவும் இந்திய அரசானது ஆணையிட்டது. மாநில சட்ட ஆணையத்தின் கூறப்பட்ட பரிந்துரைகள் மற்றும் இந்திய அரசின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு மிகவும் பழமையான மற்றும் தேவைக்கு மேற்பட்டு இருக்கும் சட்டங்களை நீக்கறவு செய்வதற்கு அரசானது முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்ட முன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம்கொடுக்க

விழைகிறது.

**எஸ். ரகுபதி,**
சட்டத்துறை அமைச்சர்.

சென்னை—600 009,
2021 செப்டம்பர் 9.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2021 – ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 9–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/2021

**1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

1. (1) இந்தச் சட்டம் 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (இரண்டாம் திருத்தச் சட்டம்) என வழங்கப் பெறும். குறுந் தலைப்பு மற்றும் தொடக்கம்

(2) இது 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ஆம் நாள் அன்று நடைமுறைக்கு வந்து விட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 37/1987. 2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டமென வழங்கப் பெறுவதான) 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர். எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னைச் சட்டத்தின் 67 ஆம் பிரிவில், (4) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- 67 ஆம் பிரிவின் திருத்தம்.

தமிழ் நாடு சட்டம் 20/2013 "(4A) இந்தச் சட்டம் 2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி நடைமுறையில் இருக்கும் அல்லது இச்சட்டத்தின்படி செய்யப்பட்ட நிலை விதிகள், துணை முறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் உள்ளடங்கிய எது எவ்வாறிருப்பினும், 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ஆம் நாளுக்கு முன்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மாணவராக இருந்த அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ அறிவியல், பல் மருத்துவ அல்லது செவிலியர் பயிற்சியின் தேர்வுகள் எதையும் எழுத தகுதியுடைய நபர் ஒவ்வொருவரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தன் குறித்தகால படிப்பினை முடிக்க அனுமதிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் குறித்தகால படிப்பிற்கிணங்க தமிழ்நாடு டாக்டர். எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தினால் தீர்மானிக்கப்படலாகும், அத்தகைய மாணவர்களுக்கு, அத்தகைய கால அளவிற்கு மற்றும் அத்தகைய முறையில் அறிவுரைகள், கற்பித்தல் மற்றும் பயிற்றுவித்தலுக்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு டாக்டர். எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னையானது, செய்தல் வேண்டும்

மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் தேர்வுகளுக்கு அத்தகைய மாணவர்கள் அத்தகைய காலத்தின் போது அனுமதிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தொடர்புடைய, பட்டம், பட்டயம் அல்லது பிற கல்விச் சிறப்புகளானவை அத்தகைய தேர்வுகளின் முடிவில் தகுதி பெற்ற மாணவர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுதல் வேண்டும்."

இணைப்புப் பட்டிய லுக்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் இணைப்புப் பட்டியலில்.-

(1) "I மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள "அரசு மருத்துவக்கல்லூரிகள்" என்ற தலைப்பின்கீழ்", "8. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு" என்ற உள்ளீட்டிற்குப் பிறகு பின்வரும் உள்ளீடானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"9. இராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை,அண்ணாமலை நகர்,சிதம்பரம்.";

(2) "III. அரசு பல்மருத்துவக் கல்லூரி-", என்ற தலைப்பின்கீழ், "சென்னை பல் மருத்துவக்கல்லூரி, சென்னை" என்ற உள்ளீட்டிற்காக, பின்வரும் உள்ளீடுகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:-

"1. சென்னை பல் மருத்துவக் கல்லூரி, சென்னை.

2. இராஜா முத்தையா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை,அண்ணாமலை நகர், சிதம்பரம்.";

(3) V. அரசு செவிலியர் கல்லூரி-"

என்ற தலைப்பின் கீழ், "சென்னை மருத்துவக்கல்லூரி, சென்னை" என்ற உள்ளீட்டிற்காக, பின்வரும் உள்ளீடுகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"1. சென்னை மருத்துவக்கல்லூரி, சென்னை.

2. இராணி மெய்யம்மை செவிலியர் கல்லூரி, அண்ணாமலை நகர், சிதம்பரம்."

## நோக்கக் காரண விளக்கவுரை

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, இராஜா முத்தையா பல்மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மற்றும் இராணி மெய்யம்மை செவிலியர் கல்லூரி ஆகியவை 27.01.2021 தேதியிட்ட உயர்க்கல்வித் துறையின் அரசாணை (நிலை) எண்.16-இன் மூலம், அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையிடம் ஒப்படைக்கவும், அரசு மருத்துவ நிறுவனங்களாக கருதப்பட வேண்டுமெனவும் ஆணையிடப்பட்டது. 2021 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு டாக்டர். எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை(திருத்தச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2021) மூலம் கூறப்பட்ட நோக்கத்திற்காக, 2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 20/2013) மற்றும் 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர். எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை சட்டம் (தமிழ்நாடு சட்டம் 37/1987) ஆகியன திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

2. தற்போது, 2020-2021 ஆம் கல்வியாண்டு வரை கூறப்பட்ட மருத்துவ நிறுவனங்களில் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் கூறப்பட்ட நிறுவனங்களில் தற்போது மாணவர்களாக தொடர்கின்றவர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பட்டங்கள்/பட்டயங்களே வழங்கப்படலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அரசானது, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர். எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை, சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 37/1987) இந்த நோக்கங்களுக்காக தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்ட முன்வடிவானது மேற்சொன்ன சட்டமுன்வடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மா. சுப்பிரமணியன்,**
*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

சென்னை,
2021 செப்டம்பர் 9.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

**2021 – ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 9–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/2021**

தமிழ்நாடு மாநிலத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தமிழ்நாடு மாநில ஆணையம் ஒன்றை அமைத்துருவாக்குவதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்குமானதொரு சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம் ஒன்றினை அமைத்துருவாக்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கு வகைசெய்தல் உகந்தது என்பதாலும்;

இந்தியக் குடியரசின் எழுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

**அத்தியாயம் -I.**

**முன்னுரை.**

1. (1) இந்தச் சட்டம் 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது அரசு அறிவிக்கையின் மூலம் குறிக்கக் கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,- பொருள் வரையறைகள்

(a) "தலைமையாளர்" என்பது 3-ஆம் பிரிவின் படி நியமிக்கப்பட்ட ஆணையத்தின் தலைமையாளர் என்று பொருள்படும்;

(b) "குடிமை உரிமைகள்" என்பது இந்திய அரசியலமைப்பின் 17-ஆம் உறுப்பின் மூலம் தீண்டாமை ஒழிப்பின் காரணமாக நபர் ஒருவர் அடைந்த உரிமை எதுவும் என்று பொருள்படும்;

(c) "ஆணையம்" என்பது 3 ஆம் பிரிவின் படி அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம் என்று பொருள்படும்;

(d) "அரசு" என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(e) "உறுப்பினர்" என்பது ஆணையத்தின் ஓர் உறுப்பினர் என்று பொருள்படும் மற்றும் தலைமையாளர், துணைத் தலைமையாளர் மற்றும் உறுப்பினர் செயலாளரை உள்ளடக்கும்;

(f) "வகுத்துரைக்கப்பட்டது" என்பது இந்தச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

(g) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் என்பது முறையே இந்திய அரசியலமைப்பின் 366-ஆம் உறுப்பின் (24) மற்றும் (25)-ஆம் கூறுகளில் அவற்றிற்கு அளிக்கப்பட்ட அந்த பொருளை கொண்டிருத்தல் வேண்டும்;

(h) "மாநிலம்" என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்.

**அத்தியாயம் -II.**

**தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம்.**

ஆணையத்தினை அமைத்துருவாக்குதல்

3. (1) மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம் என்று அழைக்கப்படும் ஓர் அமைப்பை, இந்தச் சட்டத்தின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை செலுத்துவதற்கும் அதற்கு குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளை ஆற்றுவதற்கும் அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) ஆணையமானது,-

(i) அரசால் நியமனம் செய்யப்பட்ட பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது

(a) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொடர்பான பொருட்கூறுகளில் சிறந்த அறிவு கொண்டுள்ள உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர், தலைமையாளராக;

(b) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திற்காக பணியாற்றியுள்ள ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் எவரையும் சார்ந்த சிறப்புமிக்க நபர் ஒருவர் துணைத் தலைமையாளராக;

(c) ஆதிதிராவிடர் எவரையும் சார்ந்த மூன்று உறுப்பினர்கள், பழங்குடியினர் எவரையும் சார்ந்த ஒருவர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொடர்பான பொருட்கூறுகளில் சிறந்த அறிவு கொண்டுள்ள சிறப்புமிக்க நபர் ஒருவர் உள்ளடங்கிய ஐந்து உறுப்பினர்கள்:

வரம்புரையாக உறுப்பினர் ஒருவர் மகளிராக இருத்தல் வேண்டும்; மற்றும்

(ii) அரசு கூடுதல் செயலாளரின் படிநிலைக்கு குறையாத இந்திய ஆட்சிப் பணியின் அலுவலர்களிலிருந்து அரசினால் அமர்த்தப்பட்ட உறுப்பினர் செயலாளர் ஒருவர்.

தலைமையாளர், துணைத் தலைமையாளர் மற்றும் உறுப்பி-னர்களின் பதவிக் காலமும் பணி நிபந்தனைகளும்.

4. (1) ஆணையத்தின் தலைமையாளர், துணைத் தலைமையாளர் மற்றும் உறுப்பினர் ஒவ்வொருவரும் அரசின் விருப்பத்திற்குட்பட்டு, மூன்று ஆண்டுகளுக்கு மிகாது அத்தகைய காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும் மற்றும் இரண்டாவது முறைக்காக மறுபணியமர்த்தத்திற்கு தகுதியுடையவராயிருத்தல் வேண்டும்:

வரம்புரையாக, தலைமையாளரானவர் எழுபது ஆண்டுகள் வயது நிறைவடையும் தேதிவரை மற்றும் துணைத் தலைமையாளர் மற்றும் பிற உறுப்பினர்களானவர் அறுபத்து ஐந்து ஆண்டுகள் வயது நிறைவடையும் தேதி வரை பதவி வகித்தல் வேண்டும்.

மேலும், வரம்புரையாக, தலைமையாளர் ஒருவர் வராதிருத்தல் காரணமாக அல்லது பிற காரணம் எதற்காகவும் அவரது அலுவல் பணிகளை நிறைவேற்ற இயலாதிருப்பின் அத்தகைய பணிகளானவை, நேர்விற்கேற்ப 3-ஆம் பிரிவின்படி தலைமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு மற்றும் அப்பணிகளில் ஈடுபடும் வரையில் அல்லது அந்தத் தலைமையாளரானவர் அவர் பணிகளை மேற்கொள்ளும் வரையில், துணைத் தலைமையாளர் அல்லது அரசினால் பணித்துரைக்கப்பட்ட அத்தகைய பிற உறுப்பினரால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக அவ்வாறு நியமிக்கப்பட்ட பின்னவர், அவர் எவரது இடத்தில் நியமிக்கப்பட்டுள்ளாரோ அவ்வுறுப்பினரின் எஞ்சியுள்ள பதவி காலத்திற்காக மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

(2) தலைமையாளர், துணைத் தலைமையாளர் அல்லது உறுப்பினர் ஒருவர், எந்த நேரத்திலும், அரசுக்கு முகவரியிட்டு தன் கைப்பட எழுத்து மூலம் தெரிவித்து, நேர்விற்கேற்ப தலைமையாளர், துணைத் தலைமையாளர் அல்லது உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாம். ஆனால் இவரது பதவி விலகல் அரசினால் ஏற்றுக் கொள்ளப்படும் வரை அவரது பதவியில் தொடருதல் வேண்டும்.

(3) (1)-ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், நபரொருவர்,-

(a) அவர், தீர்க்கப்படாத நொடிப்பு நிலையராயிருக்கிறவராயின்: அல்லது

(b) அரசின் கருத்தில் ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்கிய குற்றச் செயல் ஒன்றிற்காக குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டுச் சிறைத் தண்டணை விதிக்கப்பட்டுள்ளவராக இருப்பாராயின் : அல்லது

(c) அவர், மனச் சீர்கேடுற்றவராக, ஒரு தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் அவ்வாறு விளம்புகை செய்யப்பட்டிருப்பாராயின்: அல்லது

(d) அவர் செயல்பட மறுப்பாராயின் அல்லது செயல்படத் திறனற்றுப் போவாராயின் : அல்லது

(e) அவர், ஆணையத்தின் அனுமதி பெறாமல் ஆணையத்தின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வராதிருப்பாராயின் : அல்லது

(f) அரசின் கருத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்கு கேடுவிளைவிக்கும் வகையில் பதவியில் தம்மை அந்நபர் தொடர்ந்திருக்குமாறு செய்யும் பொருட்டு, நேர்விற்கேற்ப தலைமையாளர், துணைத் தலைமையாளர் அல்லது உறுப்பினரின் பதவி நிலையைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளாராயின், அரசானது தலைமையாளர், துணைத் தலைமையாளர் அல்லது உறுப்பினர் எவரின் பதவியிலிருந்தும் நபர் ஒருவரை நீக்கம் செய்தல் வேண்டும்:

வரம்புரையாக, அந்த உறுப்பினருக்கு கேட்பதற்கு நியாயமான வாய்ப்பொன்று வழங்கப்படும் வரையில், உறுப்பினர் எவரும் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது.

(4) தலைமையாளர், துணைத் தலைமையாளர் மற்றும் உறுப்பினர்களுக்கென செலுத்த வேண்டிய மதிப்பூதியம் மற்றும் படித்தொகைகள் மற்றும் அவர்களின் பணிநிபந்தனைகளும் வரையறைகளும் வகுத்துரைக்கப்படலாகும். அத்தகையவாறு இருத்தல் வேண்டும்.

ஆணையத்தினால் செயல்முறைகளை ஒழுங்கு முறைப்படு-த்துதல்.

5. (1) ஆணையமானது, குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தேவைப்படும்போது கூடுதல் வேண்டும் மற்றும் தலைமையாளர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய நேரத்திலும் இடத்திலும் கூடுதல் வேண்டும்.

(2) ஆணையம் அதன் சொந்த செயல்முறையை ஒழுங்குப் படுத்துதல் வேண்டும்.

(3) ஆணையத்தின் அனைத்து ஆணைகளும் முடிவுகளும் உறுப்பினர் செயலாளர் அல்லது இதன் பொருட்டு உறுப்பினர் செயலாளரால் உரிய அதிகாரமளிக்கப்பட்ட ஆணையத்தின் பிற அலுவலர் எவராலும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

காலியிடங்கள் முதலானவை ஆணையத்தின் நடவடிக்கைகளை-ச் செல்லத்த காததாக ஆக்கு தல் கூடாது.

6. ஆணையத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் பொருட்பாட்டின் தகுதிப்பாடுகளைப் பாதிக்காத நிலையில் ஆணையத்தில் காலியிடம் அல்லது அதன் அமைப்பில் குறைபாடு அல்லது தலைமையாளராக அல்லது ஓர் உறுப்பினராகச் செயல்படுகின்ற நபர் ஒருவரை நியமிப்பதில் குறைபாடு அல்லது ஒரு கூட்டத்தை நடத்துவதற்காக வழங்கப்படும் அறிவிப்பு உள்ளடங்கலாக, ஆணையத்தின் செயல்முறையில் முறைகேடு எதுவும் உள்ளது என்ற காரணத்தினால் மட்டுமே, வினவப்படுதல் அல்லது செல்லத்தகாதது ஆகாது.

ஆணையத்தின் அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்கள்.

7. (1) அரசு, இந்தச் சட்டத்தின்படி ஆணையத்தின் அலுவற்பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய எண்ணிக்கையிலான அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் ஆணையத்தில் வகை செய்தல் வேண்டும்.

(2) ஆணையத்தின் அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படித் தொகைகளும் மற்றும் பிற பணிவரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

(3) (1)-ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அலுவலர்களும், பணியாளர்களும் தலைமையாளரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் வருதல் வேண்டும்.

## அத்தியாயம் – III.

## ஆணையத்தின் செயற்பணிகள்.

ஆணையத்தின் செயற்பணிகள்.

8. ஆணையத்தின் செயற்பணிகள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும்,-

(a)தன்னிச்சையாக அல்லது பாதிக்கப்பட்ட ஒருவர் அல்லது அவரின் பொருட்டு நபரெவராலும் அளிக்கப்பட்ட மனுவின் பேரிலான புகாரினை விசாரித்தல்,-

மையச் சட்டம் 22/1955. மையச் சட்டம் 33/1989.

(i) 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் மற்றும் அவற்றின் படி செய்யப்பட்ட விதிகளில் வழங்கப்பட்ட உரிமைகள் எவற்றையும் மீறல் அல்லது அதற்கு உடந்தையாயிருத்தல்;

(ii) பொதுப்பணியாளர் ஒருவரால் அத்தகைய உரிமை மீறல் தடுப்பில் கவனக்குறைவு;

(b) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்களை பாதுகாப்பது தொடர்பான அவரது கடமைகளை நிறைவேற்றுதல் குறித்து பொதுப் பணியாளர் எவரும் முழுமையான கவனக்குறைவாக அல்லது முழுமையாக அக்கறையின்றி செயல்பட்டுள்ளாரென ஆணையமானது, கருதுகிற நேர்வில் அதனை விசாரித்து மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கை தொடங்குமாறு அரசுக்கு பரிந்துரைத்தல்;

மையச் சட்டம் 22/1955. மையச் சட்டம் 33/1989.

(c) 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் அல்லது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களிலும் தீர்மானங்களிலும் பிற ஆணைகள் எதிலும் வரையறுக்கப்பட்ட நபர் ஒருவருக்கு உரித்தான பல்வகையான காப்புக்கூறுகள் மற்றும் குடிமை உரிமைகளின் செயலாற்றத்தை மதிப்பிடுதல் மற்றும் அரசியலமைப்பின்படி அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதன் படியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக வழங்கப்பட்ட காப்புக்கூறுகள் தொடர்பான பொருட்கூறுகள் அனைத்தையும் புலனாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்;

மையச் சட்டம் 22/1955. மையச் சட்டம் 33/1989.

(d) 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் மற்றும் அப்போது நடைமுறையிலுள்ள பிற சட்டங்களின் அனைத்து காப்புக் கூறுகளின் பயனுடைய செயலாக்கம் மற்றும் நிறைவேற்றத்தை உறுதி செய்யும் நோக்குடன் பரிந்துரைகள் செய்தல்;

(e) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொடர்பாக ஒன்றியம் மற்றும் மாநில அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகளின் செயலாக்கத்தின் மறு ஆய்வினை மேற்கொள்ளுதல்;

(f) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உரிமைகள் மற்றும் காப்புக்கூறுகள் மறுப்பு தொடர்பான குறிப்பிட்ட புகார்களை விசாரித்தல்;

மையச் சட்டம் 22/1955. மையச் சட்டம் 33/1989.

(g) 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் தொடர்பான கல்வியறிவினை சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கிடையே பரப்புதல் மற்றும் வெளியீடுகள், ஊடகம், கருத்தரங்குகள் மற்றும் கிடைக்கக்கூடிய வழிவகைகள் மூலம் இவ்வுரிமைகளின் பாதுகாப்பிற்காக இருக்கக்கூடிய காப்புக்கூறுகளின் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்;

(h) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான பாகுபாட்டினை தவிர்க்கும் எழுவினாவின் மீதான ஆய்வு, ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வினை மேற்கொள்ளுதல்:

(i) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொடர்பாக அரசானது மேற்கொள்ள வேண்டிய தகுந்த சட்ட மற்றும் நல நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்குதல்:

(j)சட்டங்களின் நிறைவேற்றமானது செயலற்றதாயிருக்கிற அல்லது நெறிப்படுத்தப்படாதிருக்கிற பகுதிகளை அடையாளம் காணும் நோக்கத்துடன் ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடியினர் பெண்கள் தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்டங்களின் செயல்பாட்டை கண்காணித்தல் மற்றும் மேற்கொள்ள வேண்டிய செயலாட்சி அல்லது சட்ட நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்:

(k) மனித உரிமைகள் துறையில் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் செயல்படும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் முயற்சிகளை ஊக்குவித்தல்:

(l) காலமுறையிலான அறிக்கைகளை வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய கால இடைவெளியில் அரசுக்கு அனுப்புதல்: மற்றும்

(m) இந்தச் சட்டம் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளினால் அதன் மீது அளிக்கப்படலாகும் அல்லது விதிக்கப்படலாகும் அத்தகைய பிற செயற்பணிகளை நிறைவேற்றுதல்:

வரம்புரையாக அரசியலமைப்பின் 338-ஆம் உறுப்பின்படி நிறுவப்பட்ட ஆதிதிராவிடருக்கான தேசிய ஆணையம் அரசியலமைப்பின் 338-A-ஆம் பிரிவின் படி நிறுவப்பட்ட பழங்குடியினருக்கான தேசிய ஆணையத்திடமிருந்து, பொருட்பாடு எதையும் கைப்பற்றப் பட்டிருந்தால் அத்தகைய பொருட்பாடின் மீது ஆணையத்தின் அதிகார வரம்பானது அற்றுப் போதல் வேண்டும் மற்றும் முரண்பாடான பரிந்துரைகளின் நேர்வில் இவ்வாணையத்தின் பரிந்துரையின் மீது நேர்விற்கேற்ப ஆதிதிராவிடருக்கான தேசிய ஆணையம் அல்ங்க்கான தேசிய ஆணையத்தின் பரிந்துரையானது மேலோங்கி நிற்கும்.

ஆணையத்தின் அதிகாரங்கள். 9. ஆணையமானது, 8-ஆம் பிரிவின் படியான செயற்பணிகளை நிறைவேற்றுகையில், 1908-ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின் படி, உரிமை வழக்கு ஒன்றை விசாரணை செய்யும் உரிமையியல் நீதிமன்றமொன்றின், குறிப்பாக, பின்வரும் பொருட்பாடுகள் தொடர்பான, அனைத்து அதிகாரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:- (மையச் சட்டம் V/1908.)

(a) நபரெவருக்கும் அழைப்பாணை விடுத்தல் மற்றும் அவரது வருகையை கட்டாயப்படுத்துதல் மற்றும் அவரை உறுதிமொழியின் பேரில் விசாரித்தல்:

(b) ஆவணம் எதனையும் கண்டறிதல் மற்றும் முன்னிலை-படுத்துமாறு கோருதல்:

(c) உறுதிமொழி ஆவணங்களின் பேரில் சான்றினைப் பெறுதல்:

(d) பொதுப் பதிவுறு அல்லது அதன் நகல் எதனையும் நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் கோருதல்:

(e) சாட்சிகள் மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்வதற்காக பணிப்பாணைகளை வழங்குதல்: மற்றும்

(f) வகுத்துரைக்கப்படலாகும் பிறப் பொருட்பாடுகள் எதுவும்.

ஆணையத்தை அரசு கலந்தாலோசித்தல்

10. அரசானது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களை பாதிக்கும் முக்கியமான கொள்கை பொருட்பாடுகளின் பேரில் ஆணையத்தை கலந்தாலோசிக்கலாம்.

## அத்தியாயம்-IV.

## நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை.

அரசினால் வழங்கப்படும் மானியங்கள்.

11. (1) அரசானது, இதன் பொருட்டு சட்டத்தின் மூலம் மாநில சட்டப் பேரவையினால் தக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வதற்கு, அரசு பொருத்தமெனக் கருதலாகிறவாறான அத்தகைய பணத் தொகையை மானியங்கள் மூலமாக ஆணையத்திற்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஆணையமானது இந்தச் சட்டத்தின்படியான செயற் பணிகளை நிறைவேற்றுவதற்காக, அது பொருத்தமெனக் கருதக்கூடிய அத்தகைய தொகைகளை மானியங்களிலிருந்து செலவு செய்யலாம், மற்றும் அத்தகைய தொகையானது 1-ஆம் உட்பிரிவில் குறிக்கப்பட்ட மானியங்களிலிருந்து செலுத்தப்பட்ட செலவீனமாக கருதப்படுதல் வேண்டும்.

(3) தலைமையாளருக்கும், துணைத் தலைமை யாளருக்கும் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படத்தக்க மதிப்பூதியமும் படித்தொகைகளும், மற்றும் உறுப்பினர் செயலாளர், அலுவலர்கள் மற்றும் ஆணையத்தின் பிற பணியாளர்களுக்கு வழங்கப்படத்தக்க சம்பளங்கள் மற்றும் படித்தொகைகள் உள்ளிட்ட நிருவாகச் செலவினங்களானவை, (1)-ஆம் உட்பிரிவில் குறிக்கப்படலாகும் மானியங்களிலிருந்து வழங்கப்படுதல் வேண்டும்.

கணக்குகள் மற்றும் தணிக்கைகள்.

12. (1) ஆணையத்தின் கணக்குகளானவை, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும் படிவத்திலும் பேணி வரப்படுதல் வேண்டும். ஆணையமானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் ஆண்டுக் கணக்கு விவர அறிக்கை யொன்றைதயாரித்தல் வேண்டும்.

(2) ஆணையத்தின் கணக்குகளானது அரசு, இதன் பொருட்டு நியமிக்கக்கூடிய அத்தகைய தணிக்கையாளரால் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(3) (2)-ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட தணிக்கையாளரானவர், தணிக்கையின் நோக்கங் களுக்காக, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய உரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் அதிகார உரிமையைக் கொண்டிருக்கும்.

(4) உறுப்பினர் செயலாளரானவர், தணிக்கை அறிக்கையை அச்சிடுவதற்கும் அதன் அச்சுப்படியை அதன் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அனுப்பி வைப்பதற்கும், அத்தகைய அறிக்கையை அதன் அடுத்தக் கூட்டத்தில், பரிசீலனைக்காக, ஆணையத்தின் முன் வைத்தல் வேண்டும்.

(5) ஆணையம், தணிக்கை அறிக்கையில் சுட்டிக் காட்டப்படக் கூடிய குறைபாடு அல்லது முறைகேடு எதனையும் உடனே களைவதற்கு உரிய நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

(6)தணிக்கையாளரால் சான்றளிக்கப்பட்ட, ஆணையத்தின் கணக்குகள், தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து ஆணையம் அதன் மீது வழங்கும் குறிப்புகளுடன், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குள் அரசுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(7) அரசு, தணிக்கை அறிக்கையில் குறைபாடுகள் எவையேனும்தெரிவிக்கப்பட்டிருக்குமேயாயின், எழுத்து வாயிலான ஆணை மூலமாக, அந்த ஆணையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய கால அளவிற்குள், அக்குறைபாடுகளைக் களைவதற்கு அந்த ஆணையில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய நடவடிக்கையை எடுக்குமாறு ஆணையத்தைப் பணிக்கலாம் மற்றும் ஆணையம் அத்தகைய பணிப்புரைக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

ஆண்டறிக்கை.

13. ஆணையம், நிதி ஆண்டு ஒவ்வொன்றிற்கும் அதன் தணிக்கை அறிக்கையில், முந்தைய நிதியாண்டின் போதான அதன் நடவடிக்கைகள் முழுவதையும் விவரமாகக் கொடுத்து, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும் அத்தகைய நேரத்திலும் தயாரித்து, அரசிற்கு அதன் நகல் ஒன்றினை அனுப்புதல் வேண்டும் .

ஆண்டறிக்கையும் தணிக்கை அறிக்கையும் சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.

14. ஆண்டறிக்கையை, அதில் அடங்கிய பரிந்துரைகளில் அரசு தொடர்பானவற்றின் மீது எந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற குறிப்புடனும் மற்றும் அந்த தணிக்கை அறிக்கையையும் சேர்த்து அந்த அறிக்கைகள் பெறப்பட்டவுடன் எவ்வளவு விரைவில் கூடுமோ, அவ்வளவு விரைவில் அந்த அறிக்கையை சட்டமன்றப் பேரவை முன்பு வைப்பதற்கு அரசு ஆவன செய்தல் வேண்டும்.

## அத்தியாயம்-V.

### பல்வகை.

ஆணையத்தின் தலைமையாளர், துணைத் தலைமையாளர், உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் முதலானோர் பொது ஊழியர்கள் ஆவர்.

15. இந்தச் சட்டத்தின் வகை முறைகள் எதனையும் அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது பணிப்பாணை எதனையும் ஒட்டி செயல்படுகின்ற அல்லது செயல்படுவதாகப் புலப்படுகின்றபோது, ஆணையத்தின் தலைமையாளர், துணைத் தலைமையாளர், உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21-ஆம் பிரிவின் பொருளின்படி, பொது ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

மையச் சட்டம் XLV/1860

நல்ல எண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

16. இந்தச் சட்டம் அல்லது இதன்படி செய்யப்பட்ட, அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, ஆணை அல்லது பணிப்பாணையினை ஒட்டி நல்ல எண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும், ஆணையத்தின் உறுப்பினர் எவருக்கும் அல்லது அலுவலர் அல்லது பிற பணியாளர் எவருக்கும் எதிராக, அல்லது அரசின் அல்லது ஆணையத்தின் பணிப்பாணையின்படிச் செயல்படுகின்ற நபர் எவருக்கும் எதிராக, உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது .

17. (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எவற்றையுமோ நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

(2) குறிப்பாகவும் முன் சென்ற அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்கு ஊறின்றியும் அத்தகைய விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்குமோ அல்லது அவற்றில் எவற்றிற்குமோ வகை செய்யலாம்: அதாவது:-

(a) தலைமையாளர், துணைத் தலைமையாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படத்தக்க மதிப்பூதியம் மற்றும் படித்தொகைகள் மற்றும் 4-ஆம் பிரிவின் (4)-ஆம் உட்பிரிவின்படி தலைமையாளர் மற்றும் உறுப்பினர்களின் பணி பற்றிய வரையறைகளும், நிபந்தனைகளும் மற்றும் 7-ஆம் பிரிவின் (2)-ஆம் உட்பிரிவின்படி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படத்தக்க ஊதியங்களும், படித்தொகைகளும்; மற்றும் பிற பணி வரையறைகளும் நிபந்தனைகளும்;

(b) 12-ஆம் பிரிவின் (1)-ஆம் உட்பிரிவின்படி கணக்குகள் எந்த படிவத்திலும் முறையிலும் மற்றும் ஆண்டு கணக்குகளின் விவர அறிக்கை எந்த படிவத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதும்;

(c) 13-ஆம் பிரிவின்படி ஆண்டறிக்கை எந்தப் படிவத்தில் மற்றும் எந்த நேரத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதும்;

(d) அரசிற்கு ஆணையத்தினால் அனுப்பப்படும் காலமுறையிலான அறிக்கையின் அத்தகைய முறை மற்றும் கால இடைவெளிகள்;

(e) இந்தச் சட்டத்தின்படி வேண்டுறுத்தப்படக் கூடிய அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய பிற பொருட்பாடு எதுவும்.

(3) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதிகள் அனைத்தும், **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்படும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் விதிகள், அறிவிக்கைகள் அல்லது ஆணைகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்டதொரு நாளில் அவை நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்று வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்படும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி அல்லது அறிவிக்கை அல்லது பிறப்பிக்கப்படும் ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்படுதல் வேண்டும்: மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடரோ அதை அடுத்து வரும் கூட்டத் தொடரோ முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அந்த விதியோ, அறிவிக்கையோ அல்லது ஆணையோ செய்யப்படுதலோ பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்ற பேரவை முடிவு செய்யுமாயின், அதன் பின்பு அந்த விதியோ அறிவிக்கையோ அல்லது ஆணையோ அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட படிவத்தில் மட்டுமே செயல் வடிவம் பெறுதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப செயல் வடிவம் பெறாது போதல் வேண்டும். எனினும் அவ்வாறு மாற்றியமைப்பது அல்லது செயல் வடிவம் பெறாது போகச் செய்வது எதுவும், அந்த விதியின்படியோ அறிவிக்கையின்படியோ அல்லது ஆணையின்படியோ முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

ஆணையத்திடம் நபர்களால் செய்யப்பட்ட அறிக்கைகள்.

18.ஆணையம் அல்லது 9-ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட அலுவலர் அல்லது முகமை அல்லது நபரெவரின் முன் சான்று வழங்கும் போது நபரொருவரால் செய்யப்பட்ட அறிக்கை எதுவும், அத்தகைய அறிக்கையினால் பொய் சான்று வழங்கப்பட்டதற்கான சட்ட நடவடிக்கையைத் தவிர, உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கை எதற்கும் அவரை உள்ளாக்குதல் அல்லது அவை எதிலும் அவருக்கெதிராக பயன்படுத்துதல் ஆகாது:

வரம்புரையாக அறிக்கையானது-

(a)ஆணையத்தினால் அல்லது அத்தகைய அலுவலர் அல்லது முகமை அல்லது அத்தகைய நபரினால் விடையளிப்பதற்காக கோரப்பட்ட வினாவிற்கான பதிலில் செய்யப்பட்டது அல்லது

(b) விசாரணையின் கீழ் உள்ள பொருட்பாடுடன் தொடர்புடையது ஆகும்.

பிற சட்டங்களின் பொருந்துகை தடை செய்தல் ஆகாது.

19. இந்தச் சட்டத்தில் வேறு விதமாக வகை செய்யப்பட்டவாறல்லாமல், இந்தச் சட்டங்களின் வகையங்களானது, கூடுதலாக இருக்குமேயன்றி, அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதனையும் மதிப்புக்குறைவு செய்தலாகாது.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

20. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாதனவாயிராத வகையில், அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானவையென்றோ உகந்தவையென்றோ அதற்கு தோன்றுகின்ற வகைமுறைகளைச் செய்யலாம்:

வரம்புரையாக, அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுக்கால அளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதலாகாது .

**நோக்கக் காரண விளக்கவுரை.**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலனைப் பாதுகாத்திட மற்றும் அவர்களின் பொருளாதார மற்றும் சமூக நல்வாழ்வைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், இந்த நோக்கத்திற்காக தேவைப்படலாகும் அத்தகைய அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகளுடன் ஓர் ஆணையத்தை அமைத்துருவாக்க அரசானது முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்ட முன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

***என். கயல்விழி செல்வராஜ்,***
*ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.*

**நிதி பற்றிய குறிப்பு**

2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்ட முன்வடிவானது இயற்றப்பட்டு செயற்பாட்டிற்கு கொண்டு வரப்படும்போது, இந்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதலில் மாநில அரசின் தொகுநிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும். எனினும், முன்மொழியப்பட்ட சட்டத்தின் விளைவாக உள்ளாக நேரிடும் செலவினத்தை, இந்த நிலையில், எந்த அளவிலான துல்லியத்துடனும் மதிப்பிட இயலாது.

***என். கயல்விழி செல்வராஜ்***
*ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

**இச்சட்டமுன்வடிவின்** 1(3), 3(1), 4(4), 7(2), 8(e), 9(f), 12(1)(3)(6) **மற்றும்** (7), 13, 17 **மற்றும்** 20 **ஆகிய கூறுகள் அவற்றில் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகளை வழங்குதல் அல்லது ஆணைகளை பிறப்பித்தல் அல்லது விதிகளை செய்தலுக்காக அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றன.**

2. **ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.**

***என். கயல்விழி செல்வராஜ்,***
*ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.*

சென்னை—**600 009,**
**2021** செப்டம்பர் **9.**

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.